අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref.: ED/09/96/07/1

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.:

දිනය / திகதி / Date: 2023.08.

சகல மாகாணச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்

**தேசிய வாசிப்பு மாதம், பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தின செயற்றிட்டங்களை செயல்படுத்துதல் - 2023**

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 அக்டோபர் மாதத்தில் இடம்பெறும் தேசிய வாசிப்பு மாதத்திற்கிணைவாக பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்றிட்டங்கள் தொடர்பான வழிகாட்டுதல்களுக்காக இந்த ஆலோசனை வழங்கப்படுவதுடன், பாடசாலை மாணவர்களின் வாசிப்பை ஊக்குவிப்பது இதன் முககிய குறிக்கோலாகும்.

**01.தேசிய வாசிப்பு மாதத்திற்கான செயற்றிட்டங்களை வரிசைப்படுத்தல்.**

புத்தகங்கள் மற்றும் பிற மதிப்புமிக்க வாசிப்புப் பொருட்களைத் தேர்ந்தெடுத்து வாசிப்பதன் மூலம் சமநிலையான ஆளுமையுடனகூடிய உணர்திறன் மற்றும் அறிவுள்ள குழந்தைகளின் தலைமுறையை உருவாக்குவதற்காக, ஒவ்வொருவருக்கும் வாழ்நாள் முழுவதும் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டங்கள் வரையப்பட்டு நடைமுறைப்படுத்துவது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.. இதற்காக, நிதி சேகரிப்பு மற்றும் மாணவர்கள் அல்லது பெற்றோருக்கு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தக் கூடாது என்பதுடன் பாடசாலையில் நிலவும் அல்லது பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் வளங்களை தேவைக்கேற்றவாறு பயன்படுத்தி செயல்படுத்தப்பட வேண்டியதுடன், அதன் பிரகாரம் பின்வரும் துறைகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

1.1 பாடசாலை மாணவர்களின் வாசிப்புத் தேவையினை கண்டறிதல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்.

1.2 பாடசாலை புத்தகங்கள் உள்ளிட்ட நூலக வாசிப்பு பொருட்களின் சேகரிப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் நூலக வசதிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்சசிகளை ஏற்பாடு செய்தல்

எ.கா புத்தக கண்காட்சிகளை நடத்துதல், வருடாந்த நூலக பரிசுத் தினமொன்றை செயல்படுத்துதல்

1.3 பாடசாலை மாணவர்களுக்கிடையில் நூலக பாவனையை அதிகரித்தல், பிரபல்யபடுத்துதல் மற்றும் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை அதிகரிப்பதற்காக பொருத்தமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்

எ.கா.-

- வாசிப்பின் பெறுமதி தொடர்பாக அறிவுறுத்துவதற்காக விரிவுரைகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள், பேச்சு, கேள்விகளை தொடுத்தல் போன்ற செயற்றிட்டங்களை ஒழுங்குப்படுத்துதல்
- பாடசாலை நூலக சேர்க்கை தொடர்பாக மற்றம் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு மற்றும் விடயங்களுக்கு வினைத்திறனுடன் பிரவேசிக்கும் முறை

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister: +94112784832, +94112784825
ලේකම් / செயலாளர் / Secretary: +94112784811, +94112785162

தொடர்பாக அறிவூட்டும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் (எ.கா. அதன் ஊடாக காலைக் கூட்டங்கள், சொற்பொழிவுகள், முக்கிய விடயங்களை ஆராயும் செயற்றிட்டம்.)

- புத்தகம் வாசிப்பிற்கு மாணவர்களை தூண்டும் விதத்திலான போஸ்ட்டர்கள், கையேடுகள் மற்றும் வாசகங்களை காட்சிப்படுத்தல்
- புத்தகங்களைப் படிப்பதன் மூலம் வாழ்க்கையை வெல்வது என்ற கருப்பொருளில் (நீங்கள் நினைக்கும் இடத்திற்குச் செல்லுங்கள் - படிக்க ஒரு புத்தகத்தைப் பெறுங்கள்), வாழ்க்கையை வென்ற சிறந்த மனிதர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சுயசரிதைகளின் தொகுப்பை சேகரித்தல், காட்சிப்படுத்தல் மற்றும் அவர்களைப்பற்றி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டங்களை செயல்படுத்துதல். (பாடசாலை நூலக சேகரிப்பு அல்லது பிற ஆதாரங்கள் மூலமாக)
- வாசிப்புத் திறன் மற்றும் முறைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் மாற்று வாசிப்புப் பொருட்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் தகவல் எழுத்தறிவை மேம்படுத்துதல்.
  (எ.கா – திரைப்படங்களை வாசித்தல், தொலைக்காட்சி நாடகங்களை வாசித்தல் முத்திரைகனை வாசித்தல் போன்றவற்றின் மூலமாக மதிப்புமிக்க மாற்று வாசிப்பு பொருட்களை அறிமுகப்படுத்தல், புத்தகங்கள் சார்ந்த மொழி ஊக்குவிப்புத் திட்டங்கள்)
- அப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட/பிரபல்யமான எழுத்தாளர் அல்லது பிரபல இலக்கியவாதி ஒருவரின் பங்கேற்புடன் இலக்கிய நிகழ்வுகளை நடத்துதல்
- பாடசாலையில் வாசிப்பு முகாம்கள், வாசிப்பு மன்றங்கள், பாடசாலை நூலக சங்கங்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்து செயல்படுத்துதல்
- பாடசாலை பூமிக்குள் மற்றும் வகுப்பறையில் நடமாடும் புத்தக பைகள் /புத்தக கூடைகள், புத்தக பைகளை வடிவமைத்தல் மற்றும் பாடசாலையில் வாசிப்பு வாரத்தை நடத்துதல்
- 2023 ஆம் ஆண்டில் பாடசாலையில் நன்றாக வாசிப்பவர்களை நூலக பயன்பாட்டு அடிப்படையில் தெரிவுசெய்து மதிப்பீடு செய்தல்

க.வே -தேசிய வாசிப்பு மாதத்தில் செயல்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்கு உரியவாறு பாடசாலை நூலக வாரம் மற்றும் நூலக தினம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**02.பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தினம்**

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் கடைசி வாரத்தில் (வாசிப்பு மாதம்) பள்ளி நூலக வாரம் வருகிறது, அந்த இறுதி வாரத்தின் திங்கட்கிழமை பாடசாலை நூலக தினமாக அங்கீகரிக்கப்படுகிறது. அதன்படி, 2023 அக்டோபர் 23 திங்கட்கிழமை முதல் அக்டோபர் 27, வெள்ளி வரையிலான 05 நாட்கள் பாடசாலை நூலக வாரம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்த வாரத்திற்கு இணைவாக, நூலக பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை பாடசாலையில் செயல்படுத்வதனால் அது தொடர்பான கலந்துரையாடல் மற்றும் ஆர்வத்தை மாணவர்களிடையே ஏற்படுத்துவதன் மூலமாக மாணவர்களிடம் சுயகற்றல் திறனை மேம்படுத்துவதே குறிக்கோளாகும்

அதன் பிரகாரம் பின்வரும் ஆலோசனைகளின் படி தேசிய வாசிப்பு மாதத்தில் பாடசாலையில் பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தினம் தொடர்பான வேலைத்திட்டங்களை பின்வரும் அறிவுறுத்தல்களின்படி நடைமுறைப்படுத்துவது அதிபரின் பொறுப்பாகும் அதன்போது பாடசாலை நூலகக் குழு மூலமாக இந்த நிகழ்ச்சிகளை ஏற்பர்டு செய்ய வேண்டும என்பதுடன், நூலக வாரத்தை வகுப்பு மட்டத்தில் செயல்படுத்துவதற்காக வகுப்பு இரண்டு நூலகத் தலைவர்களை நியமிப்பது பொருத்தமாகும்.

**03.பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தின செயற்பாடுகளை வரிசைப்படுத்தல்**

3.1 **2023.10.23** பாடசாலை நூலக தினம்

- நூலக வாரத்திற்குரிய தலைப்புடன் ஒரு பேனரை பாடசாலை முன்னால் காட்சிப்படுத்தல், 2023 தலைப்பு "நினைத்த இடத்திற்கு செல்லவும் - வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை எடுக்கவும்"

பாடசாலைக்கு பொருத்தமான தலைப்பிற்குரிய லோகோ ஒன்று (சின்னம் ஒன்று) உருவாக்குதல் - எ.கா.: பேனர் மற்றும் போஸ்ட்டர் போன்றவற்றை காட்சிப்படுத்தும் போது இந்த லோகோவை ((சின்னம்) உள்ளடக்கலாம்

இந்த பேனர் குறைந்தபட்சம் 4 அடி நீலம் மற்றும் 2 அடி அகலமாக தயாரிக்கப்பட வேண்டும்.

பேனரின் மாதிரி படிவம்

| |
|---|
| **"நினைத்த இடத்திற்கு செல்லவும் - வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை எடுக்கவும்."**<br>**புாடசாலை நூலக வாரம் (2023 அக்டோபர் 23 – 27)** |

- பாடசாலையின் காலை கூட்டத்தில் "நூலகப் பயன்பாட்டின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் உரையை வழங்குதல் மற்றும் நூலக வாரத்தின் தொடக்கம் மற்றும் நாள் குறித்து மாணவர்களுக்குத் தெரிவித்தல். (அறிக்கையை வாசித்தல்)

- பாடசாலை நூலக வாரத்திற்காக (2023 ஆம் ஆண்டிற்கான)வழங்கப்பட்ட தலைப்பில் ("நீங்கள் நினைக்கும் இடத்திற்குச் செல்லுங்கள் - படிக்க புத்தகத்தைப் பெறுங்கள்") என்ற கருப்பொருளில் விரிவுரைகள், நாடகங்கள், கலை மற்றும் சுவரொட்டிகள் அல்லது பிற ஆக்கப்பூர்வமான கூறுகளுடன் கூடிய நிகழ்ச்சிகளை செயல்படுத்துதல்.

**3.2 2023.10.24 ஆம் திகதி (இரண்டாம் நாள்)**

நூலகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் துப்புரவுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், சுற்றுப்புறச் சூழலை அழகுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**3.3 2023.10.25 ஆம் திகதி (மூன்றாம் நாள்)**

நூலக சேகரிப்பை முறைப்படுத்துதல் (முறையாக பொதிப்படுத்தல், ஸ்கிராப் புத்தகங்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான விதத்தில் பாதுகாத்தல் போன்ற செயல்பாடுகள்)

**3.4 2023.10.26 ஆம் திகதி (நான்காம் நாள்)**

நூலக சேகரிப்பு மேம்பாட்டுக்கான புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துதல். (எ.கா- பிறந்தநாள் பரிசுத் திட்டம், புத்தாண்டு பரிசுத் திட்டம் போன்றவை)

**3.5 2023.10.27 ஆம் திகதி (ஐந்தாம் நாள்)**

2023 ஆம் ஆண்டில் பாடசாலை நூலகத்தைப் பயன்படுத்திய மாணவர்களில் நன்றாக வாசிப்பவர்களை தெரிவு செய்து அவர்களை மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல்

மேற்கூறிய அறிவுறுத்தல்களின்படி, பாடசாலையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த அறிக்கையைத் தயாரித்து, அதை கோவைப்படுத்தி நூலகத்தின் பொறுப்பில் வைத்துக்கொள்வதுடன் உள் மற்றும் வெளிப்புற மேற்பார்வையின் போது மற்றும் பிற தேவையான சந்தர்ப்பங்களில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய பாடசாலையாக இருப்பின், அந்த அறிக்கையின் பிரதியொன்றை கல்விப் பணிப்பாளர், பாடசாலை நூலக அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

மேலும், மேற்கூறிய அறிவுறுத்தல்களின்படி செயல்படுமாறு உங்களை தயவுடன் கேட்டுக்கொள்வதுடன், அதன் மூலம் பாடசாலை மாணவர்களை புத்தகங்களைப் படிக்கத் தூண்டுவதற்கு நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் நான் பெரிதும் மதிக்கின்றேன்..

(இந்த அறிவுறுத்தல்கள் மற்றும் கடிதம் கல்வி அமைச்சின் இணையத்தளமான www.gov.moe.lk இல் வெளியிடப்பட்டுள்ளது.)

செயலாளர்,
கல்வி அமைச்சு